முருகப்பெருமான் துணை

அருட்பெருஞ்சோதி! அருட்பெருஞ்சோதி!! தனிப்பெருங்கருணை! அருட்பெருஞ்சோதி!!

ஆன்மீகத்தில் அரசியலையும், அரசியலில் ஆன்மீகத்தையும் கரை கண்டவர் முருகப்பெருமான்

எதிர்காலம் குறித்த இந்தியா, தமிழகத்தில் இந்த வார நிகழ்வாக எதிர்கால பலன் குறித்த மகான் அகத்தியர் அருளிய வார ஆசி நூல்

சோபகிருது வருடம் சித்திரை மாதம் 17 திகதி முதல்

சோபகிருது வருடம் சித்திரை மாதம் 24 திகதி வரை

(30.04.2023 ஞாயிறு முதல் 07.05.2023 ஞாயிறு வரை)

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A.,B.Ed.

1. கருணை நிறைந்த பாரதமே
   கனிவும் மிகுந்த தமிழகமே
   பெருமைபட இந்தியா தமிழகத்தில்
   புகலுவேன் சோபகிருது தகர்திங்கள்
2. திங்கள் தன்னில் மூவைபீர் திகதிமேல்
   தக்கபடி அறுநான்கு திகதிவரை
   இங்கனமே நடக்கும் நிகழ்வாக
   எதிர்கால பலன்குறித்த ஆசிதனை
3. ஆசிதனை அகத்திய மகரிஷி யானும்
   அரங்க ஞானி கேட்க உரைப்பேன்
   ஆசிபட நடப்பு காலம் தன்னில்
   அக்கினியின் வேகம் மிகுந்து
4. மிகுந்துமே அதன்வழி வெப்பச்சுரம்
   மேதினியில் பீடைசோடை அணுகி
   மிகுந்திடும் மக்களிடை சலனங்கள்
   மேலும் கீழுமான அரசுகள் தக்கபடி
5. தக்கபடி வெப்பம் தணிக்கின்ற
   தவிர்க்கின்ற செயல் முறைகளை
   ஊக்கமுடன் அவசரகால நடவடிக்கைகள்
   உயர்வாய் செய்து உயிர்பாதுகாப்பு
6. பாதுகாப்புச் செய்து செயல்பட
   பாடிடுவேன் இந்தவித கோடைகாலம்
   பாதுகாப்பாக மாறி நிற்கும்
   பரோபகாரமிக்க ஞானிகளை வணங்கி

7. வணங்கி ஆளுமை சக்திகள்தானும்
வலம்வந்து கலியுக ஞானியை
வணங்கித் திருவடி பற்றியே
வழிபாடு வேலவன் மேல் செய்துவர
8. வருகவே அரங்கமகான் தருமத்தை
வழிமொழிந்து செய்து வருக
தருமபலம் ஆளுமைக்கு பெருகியே
தக்கபடி இயற்கையும் மகிழ்ந்து
9. மகிழ்ந்துமே மழை வளமாக
மண்ணில் இறங்கி நீர்வளமாகி
மகிழ்வுற அக்கினி தணிந்துமே
மக்களுக்கும் பாதுகாப்பானச் சூழல்ஆகி
10. ஆகியே ஞானிகள் ஆசிபட
ஆளுமைகள் ஞானவழிச் சிறந்து
மகிழவே இந்தியா தமிழகம்
மறுமலர்ச்சி சகலவகையிலும் காண்கும்
வார ஆசி முற்றே

–சுபம்–

முருகப்பெருமான் துணை

மகான் அகத்திய மகரிஷி அருளிய வார ஆசி நூலின் சாரம் :

சோபகிருது வருடம் சித்திரை மாதம் 17ம் நாள் **30.04.2023** ஞாயிற்றுக்கிழமை முதல் சித்திரை மாதம் 24ம் நாள் **07.05.2023** ஞாயிற்றுக்கிழமை வரை உள்ள கால நிகழ்வுகள் :

கருணையே வடிவான பாரத தேசமே! கனிவு மிக்க தமிழகமே! பெருமை மிக்க இந்தியா தமிழகத்திலே சோபகிருது வருடம் சித்திரை மாதம் 17ம் நாள் **30.04.2023** ஞாயிற்றுக்கிழமை முதல் சித்திரை மாதம் 24ம் நாள் **07.05.2023** ஞாயிற்றுக்கிழமை வரை உள்ள காலத்தில் நிகழவிருக்கும் நிகழ்வுகளை வார ஆசி நூலாக அகத்திய மகரிஷி யானும் கலியுக அவதார ஞானி ஆறுமுக அரங்க மகான் கேட்க உரைக்கின்றேன் என்கிறார் மகான் அகத்திய மகரிஷி.

நமது தேசத்திலே நடப்பு காலம் கோடை காலம் வரும் காலம் தேசத்திலே வெயிலின் கொடுமை அதிகமாகி அது மக்களுக்கு துன்பம் விளைவிக்கும் வகையில் மிகையாகி மக்களுக்கு வெப்ப சுரம் உண்டாகும் வெப்பம் சம்பந்தமான நோய்கள் அதிகமாகும். மக்கள் அவதிப்படுவார்கள்.

மத்திய மாநில அரசுகள் மக்களை கோடையின் கடும் வெப்பத்தில் இருந்து தக்க முறையில் பாதுகாக்கும் விதமாக செயல்பாடுகளை விரைந்து செயல்படுத்த வேண்டுமப்பா. மக்கள் வெப்ப சலனத்தினால் உயிர்பலி நேராதவாறு அரசு பாதுகாக்க வேண்டும்.

மக்களை பாதுகாக்கும் விதமாக பரோபகாரம் மிக்க ஞானிகளை மக்கள் நம்பிக்கையோடு வணங்கி வழிபாடுகள் செய்து வேண்டுகோள் வைத்து தர்மங்களை செய்து செயல்பாடு கண்டால், ஆளுமையில் உள்ளவர்கள் கலியுக ஞானி அரங்க மகானை கண்டு வணங்கி ஞானத்தலைவன் முருகப்பெருமான் திருவடி பற்றி பூசைகள் செய்து வருவதுடன் தர்மங்களை தாராளமாய் செய்து வர தர்மபலம் பெருகி இயற்கையும் மகிழ்ந்திடும்.

ஞானிகள் அருளும் சேர்ந்து இயற்கையும் மகிழ்ந்து நாட்டினில் தகுந்த மழை பொழிந்து பூமியை குளிர்வித்து வெப்ப சலனத்தின் பாதிப்புகளை வெகுவாக குறைத்து மக்களுக்கு பாதுகாப்பான சூழலை உருவாக்கும்.

ஞானிகள் ஆசிபட ஆளுமைகளும் சிறப்பான முறையில் ஞானவழியில் சிறந்து விளங்கி இந்தியா தமிழகம் சகல விதத்திலும் மறுமலர்ச்சியை அடைந்திடுமப்பா எனக் கூறுகிறார் மகான் அகத்திய மகரிஷி.

–சுபம்–